செ.வெ.எண். 27/ஜனவரி    செய்தி வெளியீடு    நாள்: 18.01.2016

**இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நல வாரியததின் சார்பில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப்பரிசுகளை தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகனாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.**





தருமபுரி மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (18.01.2016) மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, ஒய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், சாலையில் உள்ள மரங்களை அகற்றி சாலைகளை அகலப்படுத்தி தர கோருதல், வேலைவாய்ப்பு, கல்வியில் படிப்பதற்கு உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி, வீட்டுமனை பட்டா, வங்கிக்கடன் உதவி, தகனமேடை மற்றும் மயான சுற்றுச்சுவர் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்களான மோட்டார் பொருந்திய மூன்று சக்கர வாகனம், சக்கரநாற்காலி, நவின காதொலிக் கருவி, செயற்கைக்கால், ஊன்றுகோல், எழத்துக்களை பெரிதாக்கி காட்டும் உருப்பெருக்கி என கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் உட்பட மொத்தம் 208 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தி, புதிய குடும்ப அட்டை வேண்டி ஏற்கனவே விண்ணப்பம் அளித்தவர்களுக்கு புதிய குடும்ப அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும் மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் சார்பில் 2014 - 2105 -ம் ஆண்டிற்கான 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 5 பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு ரூ. 1 இலட்சத்து 14 ஆயிரத்து 500/- மதிப்பில் ரொக்கப்பரிசுக்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் திட்ட அலுவலர் திரு. ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.ந.உதயக்குமார், தனி துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள்) திரு. பிச்சைராமன், தனி துணையாட்சியர்கள் செல்வி எஸ். வள்ளி (ச.பா.தி), (நில அளவை) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. ரூபன்தாஸ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.